# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 057/2015

ஆணை எண்: 117/2016

நாள்: 04 /07 /2016

இடைக்கழி நாடு திரு. பால்ராஜ் இராதாகிருஷ்ணன்,
ராஜீவ் காந்தி பஞ்சாயத் ராஜ் சங்கம்,
வெண்ணாங்குப்பட்டு, கோட்டைக் காடு அஞ்சல்,
செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்–603 304. மனுதாரர்

செயல் அலுவலர்,இடைக்கழி நாடு பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம் ,
காஞ்சிபுரம். எதிர் மனுதாரர்

திரு. பால்ராஜ் இராதாகிருஷ்ணன், ராஜீவ் காந்தி பஞ்சாயத் ராஜ் சங்கம், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்பவரது 05.05.2015 நாளிட்ட இடைக்கழிநாடு பேரூராட்சியில் நிதி வீணாக்கப்படுவதாக வரப்பெற்ற புகார்களடங்கிய மனு வரப்பெற்றது. மேற்படி மனுவில் பொதுப்படையான குற்றச்சாட்டுக்கள் உள்ளதால் முறைகேடுகள் எந்த இனங்களில் உள்ளதென்பதை தகுந்த ஆதாரங்களுடன் முறையீடு செய்தால் விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென மனுதாரருக்கு இம்முறை மன்ற நடுவ அறிவிப்பு ந,க.எண்.அ1/0057/2015 நாள்.18.05.2015ன் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் மனுதாரரின் 03.09.2015 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014–ன் படியான முறையீடு 10.09.2015 அன்று முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.057/2015ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு தொடர்பாக உரிய ஆவணங்கள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு இம் முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் வட்டம் திரு.பால்ராஜ் ராதாகிருஷ்ணன் என்பவரது 03.09.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்கண்டவாறான புகார்களைத் தெரிவித்துள்ளார்:–

“கடந்த 2012– ஆம் ஆண்டு புதிதாக பொறுப்பேற்றுள்ள இடைக்கழிநாடு பேரூராட்சி மன்றத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருவதாகவும் , இடைக்கழிநாடு பேரூராட்சியில் ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் இடைக்கழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட 14வது வார்டு வெண்ணங்குப்பட்டு கிராமத்தில் கல்குளம் (காங்கிரீட் குளம்) அமைப்பதற்காக இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சி மன்ற தலைவர் மற்றும் 21 வார்டு உறுப்பினர்களும் தீர்மானம் நிறைவேற்றி, ஒப்பந்தம் பெற்று பணி செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14வது வார்டு வெண்ணாங்குப்பட்டு கிராமத்தில் வடக்கு வாஞ்சி , தெற்கு வாஞ்சி என இரண்டு குளங்கள் உள்ளன. ஆனால் இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தலைவர் அவர்கள் இந்த இரண்டு குளங்களை தவிர்த்து விட்டு சித்தாமூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொளத்தூர் ஊராட்சி தாமரைக்கேணி குளத்தை கல்குளமாக (காங்கிரீட் குளமாக) மாற்றி அமைத்துள்ளார்கள். இந்த குளம் எண்.288, ஒத்திவிலாகம் கிராமம் 3 –ஏக்கர் 14–செண்ட் நிலத்தில் அமைந்துள்ளது. இந்த நிலம் கொளத்தூர் ஊராட்சிக்கு உட்பட்டவையாகும் என்றும் 14வது வார்டு வெண்ணாங்குப்பட்டு கிராமத்தில் ஏற்கெனவே பொதுமக்களின் பயன்பாட்டிலுள்ள இரண்டு குளங்கள் கல்குளங்களாக மாற்றி அமைக்காத போது பொதுமக்களுக்கு பயன்படாத கொளத்தூர் ஊராட்சியின் தாமரைக்கேணி குளத்தை கல்குளமாக மாற்றி அமைத்து அரசியல் ஆதாயத்திற்காக செய்துள்ளனர் எனவும் இடைக்கழிநாடு பேரூராட்சியின் பொதுமக்களின் வரிப்பணம் சித்தாமுர் ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சிக்கு முறைகேடாக பயன்படுத்தியுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சித்தாமுர் ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சியில் அமைக்கப்பட்ட தாமரைக்கேணி கல்குளத்தின் (காங்கிரீட் குளம்) மொத்த மதிப்பீட்டு தொகை ரூபாய்.20 லட்சத்தை கொளத்தூர் ஊராட்சியை சார்ந்தவர்களும் அரசிடமிருந்து முறைகேடாக பெற வாய்ப்புள்ளது எனவும், அரசு மற்றும் இடைக்கழிநாடு பொதுமக்கள் வரிப்பணம் இடைக்கழிநாடு பேரூராட்சியில் லஞ்சம் மற்றும் இலாப நோக்கத்துடனும், அரசியல் காரணங்களுக்காகவும் முறைகேடாக தவறான வழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இடைக்கழிநாடு பேரூராட்சியின் பொதுமக்களின் வரிப்பணம் திருடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புகார்களின் அடிப்படையில் இடைக்கழிநாடு பேரூராட்சியில் நடைபெற்றுள்ள மற்றும் நடைபெற்று வரும் முறைகேட்டினை விசாரணை செய்து உண்மைகளை கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தருமாறு மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்."

மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக காஞ்சிபுரம் மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. 29.09.2015 நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் காஞ்சிபுரம் மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட 14வது வார்டு வெண்ணாங்குப்பட்டு கிராமத்தில் உள்ள மனுதாரர் கோரியுள்ள 2 குளங்களை பொது நிதியின் கீழ் தூர்வாரப்பட்டுள்ளது என்றும் இதில் இக்குளங்களை அரசு திட்ட நிதியில் மேம்பாடு பணி செய்திட நிதி உதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வெண்ணாங்குப்பட்டு சர்வே எண்.196–ல் அமைந்துள்ள தாமரைக்கேணி குளம் மேம்பாடு செய்தல் (ரிவிட்மெண்ட் அமைத்தல்) பணி மேற்கொள்ள திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் அவர்களின் 03.07.2014 நாளிட்ட கடிதத்தின் படி வெண்ணாங்குப்பட்டு தாமரைக்கேணி குளம் ரிவிட்மெண்ட் அமைத்தல் பணி மேற்கொள்ள இடம் சட்ட மன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யப்பட்டதின் படி நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மதிப்பீடுகள் அனுப்பி வைத்திட தெரிவிக்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதியுடன் (10.07.2014) நிர்வாக அனுமதிக்கான கருத்துரு 10.07.2014 அன்றே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்களைப் பரிசீலித்ததில் தெரியவருகிறது. பேரூராட்சி மன்றத் தீர்மானம் கருத்துரு அனுப்பப்பட்ட பின்னர் அதாவது 14.08.2014 அன்று தான் இயற்றப்பட்டுள்ளது. பேரூராட்சி மன்றத்தீர்மானம் பெறப்படாத நிலையிலேயே கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிகின்றது.

அதனைத் தொடர்ந்து மேற்படி பணியினை மேற்கொள்ள சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் மான்யம் ஒதுக்கப்பட்டும் இப்பணிக்கான கூடுதல் செலவினம் பேரூராட்சி நிதியில் பயன்படுத்திக் கொள்ளவும் மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் உத்தரவின் படி நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதென மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இடைக்கழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட தாமரைக்கேணி குளம் பொதுமக்கள் வேண்டுகோளின் படி மேம்பாடு செய்திடவும், மழைநீர் சேகரிப்பு செய்து பயன்படுத்தி கொள்ளவும் மற்றும் பேரூராட்சி பகுதியில் பெரும் பகுதிக்கு நிலத்தடி நீர் ஆதாரமாகவும் உள்ளதாலும், மேற்படி தாமரைக்கேணி குளத்தினை மேம்பாடு பணி செய்ய இக்குளத்துடன் இணைந்த கொளத்தூர் ஊராட்சியை சேர்ந்த ஒத்திவிலாகம் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒரு பகுதியும்

அவ்வூராட்சியின் இசைவு பெற்று பொது மக்களின் பயன்பாட்டிற்காக குளம் சீரமைக்கப்பட்டுள்ளது என்றும் இதில் பேரூராட்சியின் வரிப்பணம் தவறாக பயன்படுத்தப்படவில்லை என்றும்முறைகேடாக பணிகள் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பரிசீலித்ததில் இடைக்கழிநாடு பேரூராட்சி மன்றத்திலும், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம் 57, கொளத்தூர் ஊராட்சியிலும் கீழ்க்கண்டவாறு தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளது அறியப்பட்டது.

<u>பேரூராட்சி மன்றத் தீர்மானம்:</u>

திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். 1477/2014/அ3 நாள்.03.07.2014–ன் படி இடைக்கழிநாடு பேரூராட்சிக்கு 2014–2015 ஆம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து உதவி செயற்பொறியாளரால் மதிப்பீடு தயாரித்து 10.07.2014 அன்று பேரூராட்சி மன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டு நிர்வாக அனுமதி கோரிய பணிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ.எண் | பணியின் பெயர் | ஒதுக்கீடு தொகை ரூ.லட்சத்தில் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | வித்தியாசம் ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 14வது வார்டு வெண்ணாங்குப் பட்டு தாமரைக்கேணி குளம் ரிவெட்மெண்ட் அமைத்தல் | 2.00 | 20.00 | 18.00 |

மேற்கண்ட பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை சட்ட மன்ற உறுப்பினர் ஒதுக்கிய தொகையை விட கூடுதலாக இருப்பதால் பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

<u>ஊராட்சி மன்ற தீர்மானம்:</u>

சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 57 கொளத்தூர் ஊராட்சியில் 24.12.2013 தேதியன்று புதன்கிழமை முற்பகல்/பிற்பகல் 10.00 மணிக்கு தலைவர் / தனி அலுவலர் திருP.இரவிஅவர்களின் தலைமையில் ஊராட்சி மன்றம் இடத்தில் நடைபெற்ற சாதாரண அவசர / சிறப்பு கூட்டத்தின் தீர்மான நகல்

தலைவர் உள்பட கூட்டத்தில் ஆஜரான அங்கத்தினர்கள் எண்ணிக்கை: 1 + 8 = 9

| பொருள் –3 | தீர்மானம் –3 |
|---|---|
| 57 கொளத்தூர் ஊராட்சி மற்றும் இடைக்கழிநாடு பேரூராட்சி எல்லையில் அமைந்துள்ள தாமரைக்கேணி குளம் பெரும்பகுதி இடைக்கழிநாடு பேரூராட்சியையே சார்ந்தது. மேலும் இந்த குளத்தினை இடைக்கழிநாடு பேரூராட்சி மக்களே பயன்படுத்துகிறார்கள். ஆகவே தாமரைக்கேணி குளம் இடைக்கழிநாடு பேரூராட்சி மூலம் தூர்வாரி சீரமைக்கும்போது 57கொளத்தூர் ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியும் தூர்வாரி சீரமைத்து கொள்ளுமாறு மன்றம் அங்கிகாரம் கோருதல் | அங்கீகரிக்கப்பட்டது |

மேற்கண்ட ஊராட்சி மன்ற தீர்மானத்தில் தாமரைக்கேணி குளம் பெரும்பகுதி இடைக்கழிநாடு பேரூராட்சியையே சார்ந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆவணங்களை பரிசீலித்ததில் குளத்தின் மொத்த பரப்பளவான 3 ஏக்கர் 14 செண்ட்டில் பெரும்பகுதி அதாவது 2 ஏக்கர் கொளத்தூர் ஊராட்சி பகுதியிலேயே அமைந்துள்ளது. எனவே, தீர்மானமே தவறாக போடப்பட்டுள்ளது.

மேற்கூறிய மனுதாரர் முறையீடு புகார் மனு மற்றும் அறிக்கைகள் தொடர்பாக செயல் அலுவலர் திருமதி.சாந்த ஜெயலட்சுமி அவர்களிடம் இம்முறை மன்ற நடுவத்தால் 28.10.2015 மற்றும் 08.02.2016 ஆகிய நாட்களில் விசாரணை நடத்தப்பட்டது. உதவி இயக்குநர், பேரூராட்சி காஞ்சிபுரம் அவர்களிடம் 11.03.2016 மற்றும் 05.04.2016 ஆகிய நாட்களில் விசாரணை நடத்தப்பட்டது.

11.03.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின் போது பேரூராட்சி உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மற்றும் இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.சாந்த ஜெயலட்சுமி அளித்துள்ள வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்கள்.

> முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள 14வது வார்டு இடைக்கழிநாடு பேரூராட்சி வெண்ணாங்குப்பட்டு கிராமத்தில் வடக்கு வாஞ்சி, தெற்கு வாஞ்சி என இரண்டு குளங்கள் உள்ளது. கொளத்தூர் ஊராட்சி மற்றும் இடைக்கழிநாடு பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்ட தாமரைக்கேணி குளத்தை காண்கீரிட் குளமாக மாற்றப்பட்டது உண்மைதான் என்றும் பேரூராட்சி பொது நிதியில் இருந்து 18 லட்சம் ரூபாயும் சட்ட மன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 2 லட்சமும் ஆக ரூபாய்.20 லட்சத்திற்கு செலவு செய்யப்பட்டது என்றும், அப்பொழுது

திருமதி.சாந்த ஜெயலட்சுமி என்பவர் செயல் அலுவலர் பொறுப்பில் இருந்தார் என்றும் இந்த குளத்தினுடைய மொத்த பரப்பளவு 3 ஏக்கர் 14 செண்ட் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 2 ஏக்கர் கொளத்தூர் ஊராட்சியையும் எஞ்சிய 1 ஏக்கர் 14 செண்ட் இடைக்கழிநாடு 14வது வார்டை சேர்ந்தது ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண். 1477/2014/ஆ3 நாள்.23.07.2014—ன் படி 20 லட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் இதற்கான தீர்மானம் 14.08.2014 அன்று நிறைவேற்றப் பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கழிநாடு பேரூராட்சியில் இருந்து அனுப்பப்பட்டுள்ள கருத்துருவில் 14வது வார்டு வெண்ணாங்குப்பட்டு தாமரைக்கேணி குளம் ரிவெட்மெண்ட் எனக் குறிப்பிடப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒதுக்கிய தொகை ரூ.2லட்சம் எனவும் பொதுநிதியிலிருந்து ஒதுக்கிய நிதி 18 லட்சம் எனவும், மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.20 லட்சம் என நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த கடிதத்தில் சம்பந்தப்பட்ட குளம் ஒரு ஊராட்சி பகுதியையும் ஒரு பேரூராட்சி பகுதியையும் உள்ளடக்கியது என்பது எங்குமே குறிப்பிடப்படவில்லை. கொளத்தூர் ஊராட்சியும் இடைக்கழிநாடு பேரூராட்சியும் சம்பந்தப்பட்ட இவ்வினத்தில் கோட்டைகாடிலிருந்து வெண்ணாங்குப்பட்டு இணைப்பு சாலை முழுவதும் பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்டது என மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணி ஆரம்பித்து நடக்கும் பொழுது குளப்பணி சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றியது, ஒப்பந்த பணி இறுதியானை செய்தது, பணியாணை வழங்கியது ஆகிய அனைத்து நடவடிக்கைகளின் போதும் திருமதி. சாந்த ஜெயலட்சுமி, செயல் அலுவலர் பொறுப்பிலிருந்தாரெனவும் பின்பு பணிகள் நடைபெறும்பொழுது திரு.கேசவன் என்பவர் பணியில் இருந்தாரெனவும் அவர் தற்போது பெருங்களத்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக உள்ளார் எனவும் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவில் தாமரைக் கேணி குளத்தின் ஒரு பகுதி கொளத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஒத்திவிளாகம் கிராமத்தில் உள்ளதெனவும். இக்குளத்தை இடைக்கழிநாடு பேரூராட்சி நிதியிலிருந்து புணரமைப்பு செய்ததாக கூறப்பட்டுள்ளது. காஞ்சிபுர மாவட்ட உதவி இயக்குநர், (ஊராட்சிகள்) அவர்கள் 05.04.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டார். உதவி இயக்குநர், விசாரணையின் போது தனது வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"நான் இன்று (05.04.2016) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு விசாரணைக்கு ஆஜரானேன். அசல் மனு எண். 57/2015 தொடர்பாக 57 கொளத்தூர் ஊராட்சியில் உள்ள தாமரைக்கேணி குளம் தொடர்பாக ஊராட்சி மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதற்கு ஊராட்சி ஆவணங்கள் மற்றும் கணக்குகள் ஆய்வு செய்து விரைவில் அனுப்பி வைக்கிறேன் என தெரித்துள்ளார்"

இதனைத் தொடர்ந்து இடைக்கழிநாடு பேரூராட்சியில் பணிபுரிந்த அப்போதைய செயல் அலுவலர் மா.கேசவன், (தற்போது பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர்) 05.04.2016 அன்று ஆஜராகி அளிக்கப்பட்ட செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் பின்வருமாறு:-

> "காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்களத்தூர் பேரூராட்சியில் தற்போது செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் இடைக்கழிநாடு பேரூராட்சிக்கு செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பு 02.12.2014 முதல் 29.04.2015 வரை அச்சிறுபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலராக பணியாற்றிய போதும் 29.04.2015 பிற்பகல் முதல் 23.10.2015 வரை பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலராக பணியாற்றிய போதும் கூடுதல் பொறுப்பு வகித்து வந்ததாக தெரிவித்துள்ளார்.
>
> மனுதாரர் தெரிவித்த புகார் உண்மைக்கு மாறானது பேரூராட்சி மன்றம் மீது உள்ள காழ்புணர்ச்சியால் தவறான தகவலும், பொத்தம் பொதுவாக தெரிவித்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.
>
> இடைக்கழிநாடு பேரூராட்சி பெரிய பரப்பு கொண்டது. மக்கள் தொகை 30,000க்கு மேற்பட்டது. பேரூராட்சி சொந்த வருவாய் ஆண்டுக்கு ரூ.30லட்சம் மிகவில்லை. அரசு உதவியுடன் பல்வேறு மக்கள் நல பணிகள் நடைபெறுகிறது எனவும் திட்டப்பணிகள், அரசின் அறிவுரையின் படியும், பணிகள் அளவு மேலளவு தனி பொறியியல் பிரிவு எடுத்தும், சரிபார்த்தும் சமர்ப்பிக்கின்ற ஆவணங்கள் அடிப்படையில் பட்டியல் காசோலை மூலம் வழங்கப் படுகின்றன எனவும் பணி மேற்கொள்வதற்கான வழிமுறைகள் படி, நடைபெறும் பணிகள் உரிய முறையில் ஆவணப்படுத்தப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல மட்டத்தில் உயர் அலுவலர்களால் பணி ஆய்வு செய்யப்படுகிறது எனவும் செலவுகள் பல அரசியல் கட்சி சேர்ந்த மன்ற உறுப்பினர் கொண்ட மன்றத்தில் ஒப்புதல் பெறப்படுகிறது எனவும் பின்னர் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு செலவு சீட்டுகள் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்பதாலும் உண்மைக்கு மாறான மனு மீது நடவடிக்கை கைவிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்".

இம்முறை மன்ற நடுவத்தால் அனுப்பப்பட்ட அழைப்பாணை படி 12.04.2016 அன்று தற்போது பெருங்களத்தூர் செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.மா.கேசவன் முன்னாள் செயல் அலுவலர் இடைக்கழிநாடு அவர்கள் ஆஜராகி அளித்த வாக்குமூலம் பின்வருமாறு:-

"தற்போது 29.04.2015 முதல் பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு அச்சரப்பாக்கத்தில் செயல் அலுவலராக 02.12.2014 முதல் 23.10.2015 வரை இடைக்கழிநாடு பேரூராட்சியில் செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இடைக்கழிநாடு கருங்கல்லால் கரை அமைத்து தாமரைக்கேணி குளம் சீரமைப்பது சம்பந்தமாக ஒரு புகார் மனு வந்துள்ளது என்பது தனக்குத் தெரியும் என்றும் இடைக்கழிநாடு வெண்ணாங்குப்பட்டு கிராமத்தில் பேரூராட்சியில் இருந்து தீர்மானம் போடப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டிலிருந்து 2 லட்ச ரூபாய் ஒதுக்கினார்கள் என்றும் ஆனால் மொத்தம் 20 லட்சம் மீதமுள்ள தொகை பொதுநிதியிலிருந்து செலவு செய்யவேண்டும் என பேரூராட்சி மன்ற அனுமதி படி மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. திருமதி. சாந்த ஜெயலட்சுமி என்பவர் செயல் அலுவலராக அந்த சமயத்தில் இருந்தார் எனவும் பின்பு பணி நடக்கும் போது அவர் மாறுதல் செய்யப்பட்ட போது தான் செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும் குறிப்பிட்டார். சம்பந்தப்பட்ட வெண்ணாங்குப்பட்டு குளத்தினுடைய மொத்த பரப்பளவு 3 ஏக்கர் 14 செண்ட் ஆகும் என்றும் இதில் 2 ஏக்கர் கொளத்தூர் ஊராட்சியையும் எஞ்சிய 1 ஏக்கர் 14 செண்ட் இடைகழிநாடு 14 வார்டை சேர்ந்தது ஆகும் என உறுதி செய்தார்.

கொளத்தூர் ஊராட்சிக்கு சம்பந்தப்பட்ட அந்த குளத்தில் 2 ஏக்கர் ஊராட்சி பகுதிக்கும் மீதி பகுதி இடைக்கழிநாடு பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்டது ஆகும் என்றும் பணி 70 சதவீதம் நடந்த நிலையில் தான் கூடுதல் பொறுப்பேற்றதாகவும் தெரிவித்தார். ஊராட்சிப்பகுதியை அந்த குளத்தில் பெரும் பகுதி என்பதையும் பேரூராட்சி பகுதி குறைவான பகுதி என்பதையும், ஊராட்சிக்கான பங்குதொகை சம்பந்தப்பட்ட ஊராட்சியில் பெற வேண்டும், என்ற நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்தார். பேரூராட்சி மன்றத்திற்கு செலவுத் தொகை தெரிவித்து ஒப்புதல் பெறப்பட்டது எனவும் பணி முடிந்து 5 மாத காலம் அந்த பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும் தெரிவித்தார். பேரூராட்சியினுடைய மொத்த ஆண்டு பேரூராட்சி பொது நிதி வருவாய் சுமார் 30 லட்சமாகும் என்பதையும் ஏற்கனவே இருந்த சேமிப்பில் இருந்து 18 லட்ச ரூபாய் அந்த குளம் மேம்பாட்டிற்கு செலவிடப்பட்டது

என்பதையும் குறிப்பிட்டார். இதற்கு முன்பாக இந்த பணிகள் நடைபெறவில்லை என்றும் இடைகழிநாடு பேரூராட்சியில் 150 குளங்கள் உள்ளன எனவும் இதில் முக்கியமான குளமாக கருதியும் இந்த குளத்தினுடைய பயன்பாடு பேரூராட்சிக்கு மட்டுமே பயன்படுத்துவதாலும் இப்பணியை பேரூராட்சி மன்றம் மேம்பாடு செய்ய ஒப்புதல் அளித்ததின் பேரிலும் இக்குளம் மேம்பாடு ஊராட்சிப் பகுதி பயன் அடையாது என்பதாலும் சிறப்பினமாக கருதி இப்பணி தேர்வு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது என தெரிந்ததாகவும் குறிப்பிட்டார்.

உரிய விசாரணைகள், வாக்குமூலங்கள், அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களையும் பரிசீலித்ததன் அடிப்படையில் கீழ்கண்ட குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியமாகிறது.

1. காஞ்சிபுரம் மாவட்டம், இடைக்கழி நாடு பேரூராட்சி, வெண்ணாங்குபட்டு கிராமத்தில் உள்ள தாமரைக்கேணி குளம் பணி அனுமதி பெறுவதற்காக பேரூராட்சியில் தீர்மானம் போடப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2லட்சமும், பொது நிதியிலிருந்து ரூ.18 லட்சமும் செலவு செய்ய வேண்டும் என மன்ற அனுமதிபடி மேற்கொள்ளப்பட்டது அந்த சமயத்தில் திருமதி.சாந்த ஜெயலக்ஷ்மி என்பவர் செயல் அலுவலராக பணிபுரிந்தார். அதன் பின்னர் திரு. மா.கேசவன் செயல் அலுவலராக இருந்தார். சம்பந்தப்பட்ட குளத்தினுடைய மொத்தப் பரப்பளவு 3 ஏக்கர் 14 செண்ட். இதில் பெரும்பாலான அதாவது 2 ஏக்கர் கொளத்தூர் ஊராட்சியையும் எஞ்சிய 1 ஏக்கர் 14 செண்ட் இடைக்கழிநாடு பேரூராட்சியின் 14வது வார்டை சார்ந்ததாகும். எனவே, 2 ஏக்கர் ஊராட்சி பகுதிக்கும் மீதி பகுதியை இடைக்கழிநாடு பேரூராட்சி பகுதிக்கும் சம்பந்தப்பட்டது என்பது குறித்து குறிப்பான மன்றத் தீர்மானம் இன்றி கருத்துருக்கள் அமைந்துள்ளன. மேலும் தீர்மானத்தில் தவறான தகவலாக குளத்தின் பெரும்பகுதி பேரூராட்சி பகுதியை சார்ந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது.

2. தாமரைக்கேணி குளத்தின் பெரும் பகுதி ஊராட்சி பகுதியை சேர்ந்தது, என்பதையும் பேரூராட்சி பகுதி குறைவான பகுதி என்பதையும், ஊராட்சிக்கான பங்கு தொகை சம்பந்தப்பட்ட ஊராட்சியில் பெறவேண்டும் என்ற நிலையில் செயல் அலுவலர் (திரு.மா.கேசவன், தற்போது பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர்) மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கவில்லை. இப்பணி சம்பந்தப்பட்ட முன்மொழிவு அனுப்பப்படும் போதோ அல்லது இறுதி பட்டியல் தொகை வழங்குவதற்கு முன்போ இக்குளத்தின்பெரும்பாலான பகுதி ஊராட்சியில் பகுதியில் அமைந்துள்ள விவரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட விவரம் ஏதும் இல்லை.

3. பேரூராட்சி தீர்மானம் இயற்றப்படாமல் பேரூராட்சி மன்றத் தலைவரின் முன் அனுமதி மட்டுமே பெற்று 10.07.2014 –ல் மதிப்பிட்டுடன் கூடிய நிர்வாக அனுமதிக்கான கருத்துரு பேரூராட்சி

செயல் அலுவலரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பேரூராட்சியின் பொது நிதியில் இருந்து செலவின பங்களிப்பை மேற்கொள்ள 10.07.2014–ல் முன் அனுமதி பெறப்பட்டு அன்றைய தினமே (10.07.2014) காஞ்சிபுரம் மாவட்ட திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதிலும், "பேரூராட்சியின் 14–வது வார்டு வெண்ணாங்குப்பட்டு தாமரைக்கேணி குளம் ரிவெட்மெண்ட் அமைத்தல்" எனமட்டுமே குறிப்பிட்டு ரூ.20லட்சத்திற்கான மதிப்பீடு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இரு தனித்தனி உள்ளாட்சி அமைப்புகள் சம்பந்தப்பட்ட இப்பணி குறித்து எல்லை விவரங்களோ, பங்களிப்பு விவரங்களோ குறிப்பிடாமலும், முறையான மற்றும் முழுமையான உள்ளாட்சி மன்றத் தீர்மானம் இன்றியும் ஒப்பந்தப் பணியினை அவசரக் கதியில் ஒரு உள்ளாட்சி அமைப்பின் சார்பில் வழங்கிடவே முனைந்துள்ளதாகவே கருத வேண்டியுள்ளது,

4. தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம், 1920–ன் பிரிவு 126–ன்படி ஒரு நகர்புற உள்ளாட்சி அமைப்பு நீர் வழங்குவதற்காக அதன் எல்லைக்கு வெளியே வடிமுனை குழாய்கள் , ஏரிகள், நீர்த்தேக்கங்கள், பொறிகள், தண்டுக்குழாய்கள், கிணறுகள், நீர்ஊற்றுகள், நிலைக்குழாய்கள், பிற பணிகள் இவற்றை நிறுவ அல்லது அமைக்க அரசு அனுமதியின் பேரில் ஏற்பாடு செய்யலாமென வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடத்தில் பேரூராட்சி எல்லைக்கு வெளியேயும் பிறிதொரு உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் பெரும்பாலான பகுதி அமைந்துள்ள இடத்தில் பணி மேற்கொள்ள எவ்வித அரசு அனுமதியும் பெறப்படவில்லை.

5. அவ்வாறு பெறப்படினும், இரு வெவ்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட பகுதிகளுக்கான பணி குறித்து அமைந்துள்ள இடத்தின் அளவுகளுக்கேற்ப விகிதாசாரப்படி செலவினத் தொகை மேற்கொள்ளும் வகையில் முன்மொழிவு அனுப்பப்பட்டு அனுமதி பெறப்படும் வகையில் அமைவதே பிற்காலத்தில் பிணக்குகளோ, இது போன்ற முறையீடுகள் எழாமல் இருக்கும் என்பது பொதுவான நடைமுறையாகும். இவ்வாறு ஏதும் இவ்வினத்தில் பின்பற்றவில்லை,

இப்பணி தொடர்பாக ஊராட்சி மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து இம்முறைமன்ற ஆணைகளின் அடிப்படையில் கொளத்தூர் ஊராட்சி ஆவணம் மற்றும் கணக்குகளை ஆய்வு செய்து ஊராட்சிகளின் உதவி இயக்குநர், மதுராந்தகம் வட்டம் தனது 30.05.2016 நாளிட்ட கடிதத்தில் அறிக்கை சமப்பித்துள்ளார் அவ்வறிக்கையில் 57 கொளத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள தாமரைக்கேணி குளத்திற்காக 2013–2014 முதல் நாளது தேதிவரை எந்தவித நிதியிலிருந்தும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் செய்யப்படவில்லை என்கிற விவரத்தை சமர்ப்பித்துள்ளார்.

எனவே, இம்முறை மன்றம் உரிய விசாரணை, வாக்குமூலங்கள், அறிக்கை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்ட வகையில் சம்பந்தப்பட்ட கொளத்தூர் ஊராட்சியில்

பெரும்பகுதியாக அமைந்துள்ள தாமரைக்கேணி குளம் ரூ.20லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது, தாமரைக்கேணி குளத்தின் மொத்த பரப்பளவு 3 ஏக்கர் 14 செண்ட் ஆகும். இக்குளத்தில் 3ல் இரண்டு பகுதி (2ஏக்கர் ) கொளத்தூர் ஊராட்சி பகுதியில் உள்ளதாகும். எஞ்சிய 1 ஏக்கர் 14 செண்ட் மட்டுமே இடைக்கழிநாடு பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ளதாகும். ஆக 3ல் 2பகுதி ஊராட்சி பகுதியிலும் ஒரு பகுதி இடைக்கழி நாடு பேரூராட்சி பகுதியிலும் அமைந்துள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டக் கூறுகளின் படியும் பொதுவான விதிமுறைகளின் படியும் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மட்டுமே பேரூராட்சி பொது நிதியிலிருந்து பேரூராட்சியின் செயல் அலுவலர் அரசின் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ள வழிவகை உள்ளது. பேரூராட்சிக்கு உட்படாத பகுதியில் உள்ள தாமரைக்கேணி குளம் கட்டுவதற்கு உரிய முன்மொழிவுகளை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு தெரிவிக்காமலும் அரசு அனுமதியினை முறையாக பெறாமலும் அப்பணியினை செயற்படுத்தியது மற்றும் பேரூராட்சியின் ஒப்புதல் பெறுவதற்கு முன்பே கருத்துரு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியது, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உண்மை நிலையினை தெரிவிக்காதது, பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தாமதமாக ஒப்புதல் பெற்ற நிலை அப்போது பொருளில் பேரூராட்சி எல்லையில் குளத்தின் பெரும்பகுதி அமைந்துள்ளது என உண்மையை மறைத்து தவறாக மன்றக்கூட்டத்தில் கூட்டப்பொருளாக வைத்தது போன்ற அனைத்து நிகழ்வுகளும் விதிமீறிய செயல்களாகவே கருதமுடிகின்றது. பேரூராட்சியின் பொது நிதியை சிலர் ஆதாயம் அடைவதற்காகவே விதிகளை மீறி எல்லைத் தாண்டி செயல்பட்டு இருப்பது மிகத் தெளிவாக புலனாகின்றது. இந்நிலையில் ஊராட்சி பகுதிகளில் விதிகளை மீறி பணி மேற்கொண்ட பொதுநிதி ரூ.18லட்சம் பேரூராட்சிக்கு ஏற்பட்ட இழப்பாகும். இப்பொதுநிதி மக்களின் அடிப்படை தேவைகளை செயல்படுத்த பயன்படுத்தபட்டிருக்கலாம். மேற்கூறிய செயல்கள் விதிமுறைகளுக்கு முரணான செயல்பாடாகவே கருத வேண்டியுள்ளதாக இம்முறைமன்றத்தால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே, பேரூராட்சி பொதுநிதி ரூ.18லட்சம் இழப்பு ஏற்படுவதற்கு காரணமான கீழ்கண்ட நிர்வாக அலுவலர்கள் பொறுப்பாவார்கள்.

1. திருமதி.சாந்தஜெயலட்சுமி, செயல்அலுவலர் (இடைக்கழிநாடு பேரூராட்சி) (02.12.2014 – 23.10.2015)
2. திரு.மா.கேசவன், செயல் அலுவலர்( தற்போது பெருங்களத்தூர் பேரூராட்சி)

இந்நிகழ்வினால் இடைக்கழிநாடு பேரூராட்சியில் உள்ள பொதுமக்களின் பயன்பாட்டிற்குரிய பொதுநிதி, பேரூராட்சி எல்லைக்குள் இடம்பெறாத சிற்றூராட்சிப் பகுதிக்குள் செலவிடப்பட்ட வகையில் விகிதாச்சாரப்படி மொத்த செலவினம் ரூ.20 லட்சத்தில் இரண்டு

பகுதி சுமாராக 12.5லட்சம் பேரூராட்சி பொதுநிதியிலிருந்து விதிகளுக்கு முரணாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இம்முறைமன்றம் கருதுகின்றது.

எனவே, இச்செயல்பாட்டிற்குரிய பொறுப்பானவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

இது தொடர்பான நடவடிக்கை விவரங்கள் அடங்கிய அறிக்கையினை 6 மாத காலவரம்பிற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறும் ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 04 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை இடப்படுகிறது.

ஒம்/...
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

செயலாளருக்காக

பெறுநர்

1. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   குறளகம் , சென்னை–600 108.

2. இடைக்கழி நாடு திரு. பால்ராஜ் இராதாகிருஷ்ணன்,
   ராஜீவ் காந்தி பஞ்சாயத் ராஜ் சங்கம்,
   வெண்ணாங்குப்பட்டு, கோட்டைக் காடு அஞ்சல்,
   செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்–603 304.

3. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம்.

4. உதவி இயக்குநர்,
   பேரூராட்சிகளின்உதவி இயக்குநர் அலுவலகம்,
   காஞ்சிபுரம் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம். காஞ்சிபுரம்.

5. செயல் அலுவலர்,
   இடைக்கழி நாடு பேரூராட்சி, இடைக்கழிநாடு, காஞ்சிபுரம் மாவட்டம் .

**நகல்:**

1. ஊராட்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர்,
   பனகல் மாளிகை, சென்னை – 600 015.

2. ஊராட்சிகளின் உதவி இயக்குநர்,
   மதுராந்தகம் கோட்டம், மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம்.